**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

**முன்னிலை – திரு.R.வெங்கடேஷ் பிரசாந்த், B.A.,B.L.(Hons), மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திருப்புவனம்**

**2056, திருவள்ளுவர் ஆண்டு, விசுவாவசு வருடம், மாசி மாதம் 26–ம் தேதி**

**2026-ம் ஆண்டு மார்ச் மாதம் –10ம் நாள் செவ்வாய்கிழமை**

**ஆண்டுபட்டிகை வழக்கு எண் –16/2019**

**CNR No: TNSV15-000687-2019**

| | |
|---|---|
| குற்றம் முறையிடுபவர் | அரசுக்காக சார்பு ஆய்வாளர், திருப்புவனம் காவல்நிலையம் அதன் குற்ற எண்.160/1999 |
| குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் | 1.மாரி த/பெ.மலையாளம் (Split Up)<br>2.M.நெடுமாறன், த/பெ.நல்லமணி,<br>3.இரவி, த/பெ.கிருஷ்ணன், (இறப்பு)<br>4.மகேந்திரன், த/பெ.முனியாண்டி, (இறப்பு)<br>5.கருப்பசாமி, த/பெ.முனியாண்டி,<br>6.லோகநாதன், த/பெ.இராஜாராம்,<br>7.கார்த்திக், த/பெ.தவிடன்,<br>8.அயோத்தி, த/பெ.மாயாண்டி,<br>9.வேலுபாண்டி, த/பெ.சின்னசாமி,<br>10.குமார், த/பெ.வீரணன், (இறப்பு)<br>11.போத்திராஜா, த/பெ.வீரணன்,<br>12.சுரேஷ், த/பெ.கருப்பு அம்பலம்,<br>13.இளமாறன், த/பெ.கண்ணுசாமி, (இறப்பு),<br>14.சுரேஷ், த/பெ.தண்டியப்பன் (இறப்பு)<br>15.கண்ணன், த/பெ.ராமச்சந்திரன், |
| குற்றம் முறையிடப்பட்டது | எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 147, 336, 353ன் கீழ் |
| குற்றம் கோப்பிற்கு எடுக்கப்பட்டது | எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 147, 332, 353ன் கீழ் |
| குற்றச்சாட்டு வனையப்பட்டது | 2, 3, 5 முதல் 12, 15 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 147, 353, 332–ன் கீழ் |
| எதிரிகள் காவலுக்கு உட்படுத்தப்பட்ட நாள் | -- |
| குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த நாள் | 01.02.2000 |
| எதிரிகள் மீது குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்ட நாள் | 06.02.2024 |
| முதல் விசாரணை மற்றும் | அ.சா.1: மு.வி 22.05.2024, கு.வி: 22.05.2024 |

VENKADESHPRASANTH

Digitally signed by VENKADESHPRASANTH
Date: 2026.03.10 17:33:12 +0530

| | |
|---|---|
| குறுக்கு விசாரணை நாள் | அ.சா.2: மு.வி 30.05.2024, கு.வி: 30.05.2024<br>அ.சா.3: மு.வி 19.06.2024, கு.வி: 19.06.2024<br>அ.சா.4: மு.வி 04.06.2025 கு.வி: 04.06.2025<br>அ.சா.5: மு.வி 19.11.2025 கு.வி: 19.11.2025<br>அ.சா.6: மு.வி 27.02.2026 கு.வி: 27.02.2026 |
| பல்வகை மனு அதன் முடிவு | ---- |
| கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)–ன் கீழ் எதிரியை விசாரித்த நாள் | 03.03.2026 |
| தீர்வு | முடிவாக, 2, 5 முதல் 9, 11, 12, 15ம் எதிரிகள் இதச பிரிவுகள் 147, 332, 353ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து, கு.வி.மு.ச. பிரிவு 248(1)–ன் கீழ் எதிரிகளை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை. அதுகுறித்த உத்தரவு ஏதும் பிறப்பிக்கப்படவில்லை. |

இவ்வழக்கு கூடுதல் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் மானாமதுரையில் CC.No.197/2001 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு நிலுவையில் இருந்து வந்த நிலையில் மானாமதுரை பின் இந்நீதிமன்ற ஆளுகைக்கு உட்பட்டதால் இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு இந்நீதிமன்றத்தில் CC.No.16/2019 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இவ்வழக்கு கடந்த 09.03.2026–ம் தேதியில் என் முன்பாக இறுதி விசாரணைக்காக வந்த பொழுது, அரசுக்காக கற்றறிந்த குற்றத்துறை உதவி வழக்குரைஞர் நிலை–1 திருமதி. R.திலகராணி அவர்கள் ஆஜராகியும், எதிரிகளுக்காக கற்றறிந்த வழக்குரைஞர்கள் திரு.பி.செல்லச்சாமி மற்றும் திரு.C.தங்கவேலன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் இருதரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும் இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்புவிக்கும்,

## <u>தீர்ப்புரை</u>

இவ்வழக்கில் கடந்த 03.05.1999ம் தேதி மதியம் திருப்புவனம் நகர் தேவர் பேரவையினர் செய்த கலவரத்தில் கைது செய்து கொண்டு வரலான எதிரி ஜெகதீசன் என்பவர் உடல் நலகுறைவு காரணமாக திருப்புவனம் ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்கு கொண்டு போகும் போது இறந்துவிட்டார். அதனால் எதிரிகள் 03.05.1999ம் தேதி 21.30 மணிக்கு திருப்புவனம் காவல்நிலையம் முன்பு சட்டவிரோதமாக ஒன்றுகூடி கலகம் செய்து தனிப்பிரிவு அலுவல் மற்றும் பாதுகாப்பு அலுவலில் இருந்த சாட்சி1, சாட்சி2 ஆகியோரை

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.10 17:33:20 +0530

கற்களால் எரிந்து சாட்சி1க்கு இடது கண்ணுக்கு கீழ் முகத்தில் சிறிய காயங்களையும், சாட்சி2க்கு தலையின் வலது பக்கம், இடது மார்பு ஆகிய இடங்களில் சிறிய ரத்தக்காயத்தையும் உண்டு பண்ணி அரசு அலுவல் செய்யவிடாமல் தடுத்த குற்றம் புரிந்ததற்காக எதிரிகள் மீது இதச பிரிவுகள் 147, 336, 353ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) இவ்வழக்கில் அரசுத்தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்ற புகார் மற்றும் இதர ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதில் இவ்வழக்கின் எதிரிகள் மீது இதச பிரிவுகள் 147, 332, 353ன் கீழ் குற்றம் புரிந்திருக்கிறார் என்பதற்கு போதிய முகாந்திர ஆதாரங்கள் இருந்ததால் இவ்வழக்கு மேற்படி பிரிவின் கீழ் நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்ட பின்னர் எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜராக அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3) இவ்வழக்கின் எதிரிகள் நீதிமன்றத்தில் முன்னிலையான பின்னர் இவ்வழக்கு ஆவணங்களின் நகல்கள் பிரிவு 207 குற்ற விசாரணை நடைமுறைச் சட்ட பொருண்மைகளுக்கு இணங்க இலவசமாக வழங்கப்பட்டது.

4) இவ்வழக்கின் எதிரிகளுக்கு போதிய கால அவகாசம் கொடுத்து குற்ற அறிக்கையில் கண்டுள்ள குற்றம் பற்றி வினவ எதிரிகள் அவற்றை தம்மிச்சையாக மறுத்துக் கூறினார்கள். எனவே இருதரப்பினர்களை கேட்டும் இவ்வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்ததில் இவ்வழக்கின் எதிரிகள் மீது முதல் நோக்கில் குற்றச்சாட்டு வனைய போதிய முகாந்திரங்கள் இருந்தமையால் 2, 3, 5 முதல் 12, 15ம் எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 147, 353, 332ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் பற்றி விளக்கிக் கூறி வினவியபோது எதிரிகள் தாங்கள் குற்றவாளிகள் இல்லை என்று மறுத்தார்கள்.

5) இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.6 சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6) இவ்வழக்கு நிலுவையில் இருந்த போது 1ம் எதிரியை இவ்வழக்கிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு ஆண்டுபட்டிகை வழக்கு எண்.4/2024 ஆக நம்பரிடப்பட்டு தனியாக வழக்கு பிரிக்கப்பட்டுள்ளது.

7) இவ்வழக்கு நிலுவையில் இருந்து வருகையில், 3, 4, 10, 13, 14ம் எதிரிகள் இறந்துவிட்ட காரணத்தினால் அவர்களுக்கு எதிரான வழக்கு அற்றுப்போய்விட்டதாக இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH
Date: 2026.03.10 17:33:25 +0530

8) **அரசு தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களிலிருந்து வெளிப்படும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு:–**

8.1) அ.சா.1 மதியழகன் தனது சாட்சியத்தில், தான் தமிழ்நாடு காவல்துறையில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து 2018–ம் வருடம் பணிஓய்வு பெற்று திருப்புவனத்தில் வசித்து வருகிறதாகவும், தான் 3.5.1999–ம் வருடத்தில் திருப்புவனம் காவல்நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்து வந்தேன் என்றும், சாட்சிகள் நரசிங்கம், ராஜன், வெள்ளத்துரை ஆகியோர்களை தெரியும் நரசிங்கம் தற்போது இறந்துவிட்டார் என்றும், அவர்கள் தன்னுடன் திருப்புவனம் காவல்நிலையத்தில் பணிபுரிந்தவர்கள் என்றும், சாட்சி முருகேசன் என்பவரை தெரியும் என்றும், ஆஜர் எதிரிகளை தெரியும் என்றும், வழக்கின் மற்ற எதிரிகளை தெரியும் என்றும், கடந்த 3.5.1999–ம் தேதி திருப்புவனம் நகரில் நடந்த தேவர் பேரவையினர் சம்மந்தமான கலவரத்தில் கைது செய்யப்பட்ட ஜெகதீசன் என்பவருக்கு ஏற்பட்ட உடல் நலக்குறைவு காரணமாக அவர் இறந்துவிட்டதால் பிரச்சனை ஏற்பட்டது என்றும், அதனால் மீண்டும் பிரச்சனை வரக்கூடாது என்று திருப்புவனம் காவல்நிலையம் முன்பு தானும், தனிப்பிரிவு தலைமைக்காவலர் நரசிங்கம், முதல் நிலைக்காவலர் வெள்ளத்துரை, ஆயுதப்படை காவலர் ராஜன் ஆகியோர்கள் பாதுகாப்பு அலுவலில் இருந்தபோது இரவு சுமார் 9.30 மணியளவில் எதிரிகள் அனைவரும் காவல்நிலையம் முன்பு வந்து காவல்நிலையத்தை நோக்கி கற்களை வீசினார்கள் என்றும், ஆட்கள் மீதும் காவல்நிலையத்தின் மீதும் கற்கள் விழுந்தது என்றும், எதிரிகள் கற்களை எறிந்ததில் தலைமைக்காவலர் நரசிங்கம் என்பவருக்கு இடது கண்ணுக்கு கீழ் வீக்கக்காயமும், ரத்தக்காயமும் ஏற்பட்டது என்றும், மற்றொரு ஆயுதப்படை காவலர் ராஜன் என்பவருக்கு இடது மார்பில் கற்கள் விழுந்ததில் இடது மார்பில் காயம் ஏற்பட்டது என்றும், சட்ட ஒழுங்கு பிரச்சனை தொடர்ந்து இருந்து வந்ததால், பாதுகாப்பில் இருந்து வந்ததால் மறுநாள் 4.5.1999 அன்று இரவு 7.15 மணியளவில் இது சம்மந்தமாக தலைமைக்காவலர் நரசிங்கம் என்பவர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றும், காயம்பட்ட தலைமைக்காவலர் நரசிங்கம் மற்றும் காவலர் ராஜன் இருவரும் திருப்புவனம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டனர் என்றும், எதிரிகளின் செயலால் எங்களது அரசு பணிக்கு பாதிப்பு ஏற்பட்டது என்றும், இவ்வழக்கு சம்மந்தமாக காவல் ஆய்வாளர்கள் தன்னை விசாரித்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

8.2) அ.சா.2 முருகேசன் தனது சாட்சியத்தில், தான் கீழடியில் குடியிருந்து வருகிறேன் என்றும், தான் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வந்த தற்போது ஓய்வு

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.10 17:33:31 +0530

பெற்று மேற்படி முகவரியில் குடியிருந்து வருகிறேன் என்றும கடந்த 07.05.1999ம் தேதியில் தானும், தலையாரி துரைசிங்கம் என்பவரும் திருப்புவனம் காவல்நிலையம் அருகில் மதியம் சுமார் 1.00 மணியளவில் இருந்த போது இந்த வழக்கு சம்பந்தமாக சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், அதில் தானும், தலையாரியும் சாட்சி கையொப்பம் செய்ததாகவும், மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ.1 என்றும், போலீசார் இவ்வழக்கு சம்மந்தமாக தன்னை விசாரித்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

8.3) அ.சா.3 பிச்சாண்டி தனது சாட்சியத்தில், தான் தமிழ்நாடு காவல்துறையில் தனிபிரிவு சார்பு ஆய்வாளராக ஒய்வு பெற்று தற்போது திருப்புவனம் பாக்கியா நகரில் வசித்து வருகிறதாகவும், கடந்த 4.5.1999-ம் தேதி இரவு சுமார் 7.45 மணியளவில் திருப்புவனம் காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணியில் இருந்தபோது திருப்புவனம் தனிப்பிரிவு அலுவலில் இருந்த தலைமைக்காவலர் நரசிங்கம் என்பவர் கொடுத்த எழுத்து மூலமான புகாரை பெற்று காவல் ஆய்வாளரின் உத்தரவின் பேரில் புகாரின் தன்மைக்கேற்ப திருப்புவனம் காவல் நிலைய குற்ற எண்.160/1999 பிரிவுகள் 147,323, 332, 353 இதசவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும், புகார் மனு அ.சா.ஆ2 மற்றும் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 என்றும், அசல் புகாரையும், முதல் தகவல் அறிக்கையையும் சிவகங்கை நீதித்துறை நடுவர்-2 நீதிமன்றத்திற்கும், பிறநகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பிவைத்தேன் என்றும், மேலும் இவ்வழக்கில் கலவரத்தில் ஈடுபட்டவர்கள் கற்கல் வீசியதில் தனக்கு இடது கண்ணிற்கு கீழ் ஊமைக்காயம் மற்றும் ரத்தக்காயம் ஏற்பட்டதாகவும், தன்னுடன் இருந்த ஆயுதப்படை காவலர் ராஜன் என்பவருக்கு உடம்பு, நெஞ்சு ஆகிய பகுதிகளில் ஊமைக்காயம் ஏற்பட்டதாகவும் புகார்தாரர் குறிப்பிட்டுள்ளதாலும், அவர்களுக்கு காயம் இருந்ததாலும் மேற்படி காயம்பட்டவர்களை திருப்புவனம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தேன் என்றும், இவ்வழக்கு சம்மந்தமாக காவல் ஆய்வாளர் தன்னை விசாரித்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

8.4) அ.சா.4 வெள்ளத்துரை தனது சாட்சியத்தில், தான் தற்போது மதுரை மாநகர் மத்திய குற்றப்பிரிவு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறதாகவும், சாட்சிகள் நரசிங்கம் ராஜன், மதியழகன் ஆகியோரை தெரியும் என்றும், அவர்கள் வழக்கு சம்பவத்தின் போது தன்னுடன் பணிபுரிந்த காவலர்கள் என்றும், வழக்கின் ஆஜர் எதிரிகளையும் , மற்ற எதிரிகளையும் தனக்கு தெரியும் என்றும், சுமார் 26 வருடத்திற்கு முன்பு 03.05.1999ம்

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.10 17:33:36 +0530

தேதி இரவு 21.30 மணிக்கு நான் திருப்புவனம் காவல்நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்து வந்தபோது தன்னுடன் பணியில் இருந்த சாட்சிகள் தனிப்பிரிவு தலைமை காவலர் நரசிங்கம், ஆயுதப்படை காவலர் ராஜன் மற்றும் முதல் நிலை காவலர் மதியழகன் ஆகியோர் தன்னுடன் திருப்புவனம் காவல் நிலையம் முன்புறம் பணியில் இருந்த போது வழக்கின் எதிரிகள் மாரி, நெடுமாறன், ரவி, அயோத்தி, கார்த்திக், கருப்பசாமி,மகேந்திரன், லோகநாதன்,வேலுப்பாண்டி, குமார், போத்திராஜா,சுரேஷ், இளமாறன், உச்சிமாகாளி அம்மன்கோவில் தெருவை சேர்ந்த சுரேஷ்,கண்ணன் மற்றும் சிலர் ஆகியோர்கள் கலவரம் செய்யும் நோக்கத்தோடு கையில் கற்களோடு நாங்கள் பணி செய்யும் இடத்திற்கு வந்து கல்லால் எறிந்து பணிசெய்யவிடாமல் தடுத்தார்கள் என்றும், கல்லால் எதிரிகள் எறிந்ததில் பணியில் இருந்த , தனிப்பிரிவு தலைமைக் காவலர் நரசிங்கம் என்பவருக்கு இடது பக்க கண்ணுக்கு கீழ் கன்னத்தில் காயம் ஏற்பட்டது என்றும், ஆயுதப்படை காவலர் ராஜன் என்பவருக்கு இடது பக்க நெஞ்சில் காயம் ஏற்பட்டது என்றும், இது சம்பந்தமாக தலைமை காவலர் நரசிங்கம் திருப்புவனம் காவல் நிலையத்தில் மறுநாள் 04.05.1999ம் தேதி இரவு 07.45 மணிக்கு புகார் கொடுத்தார் என்றும், கலவரமாக இருந்ததால் மறுநாள் புகார் கொடுத்தார் என்றும், மேற்படி புகாரை பெற்று தலைமை காவலர் பிச்சாண்டி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார் என்றும், இச்சம்பவத்தால் தங்களது அரசு பணி செய்வதில் தடை ஏற்பட்டது என்றும், மேற்படி சம்பவம் திருப்புவனம் காவல் நிலையம் முன்பு நடந்தது என்றும், மேற்சொன்னவாறு கலவரத்தில் ஈடுபட்டு கற்களை வீசி காயப்படுத்திய எதிரிகளில் மூவர் இன்று நீதிமன்றத்தில் ஆஜர் ஆகி உள்ளார்கள் என்றும், மற்ற எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், காயம் பட்ட நரசிங்கம், ராஜன் ஆகியோர் திருப்புவனம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டார்கள் என்றும், இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர்கள் ஜானகிராமன், முருகேசன் தன்னை விசாரித்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

8.5) அ.சா.5 துரைசிங்கம் தனது சாட்சியத்தில், தான் திருப்புவனம் லாடனேந்தலில் வசித்து, திருப்புவனம் புதுார் குரூப் கிராம உதவியாளராக வேலைப் பார்த்து, ஓய்வு பெற்றுவிட்டதாகவும், சாட்சி முருகேசனைத் தெரியும் என்றும், அவர் சம்பவ சமயம் திருப்புவனம் புதுார் கிராம நிர்வாக அலுவலராக வேலைப் பார்த்தார் என்றும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது கையொப்பம் தன்னுடையது தான் என்றும், அதில் முதலாவதாக கிராம நிர்வாக அலுவலர் முருகேசன் கையொப்பம் செய்துள்ளார் என்றும், கடந்த 1999 ம் வருடம் தேதி, மாதம் நினைவில் இல்லை ஒரு வழக்கு

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.10 17:33:41 +0530

சம்பந்தமாக தானும், கிராம நிர்வாக அலுவலர் முருகேசனும் திருப்புவனம் காவல் நிலையத்திற்கு சென்றிருந்தோம் என்றும், அங்கு போலீசார் மேற்சொன்ன பார்வை மகஜரில் தன்னிடமும், கிராம நிர்வாக அலுவலகர்களிடமும் சாட்சியாக கையொப்பம் வாங்கினார்கள் என்றும், பார்வை மகஜரை கிராம நிர்வாக அலுவலர் முருகேசன் படித்துப் பார்த்தார் என்றும், போலீசார் ஒரு வழக்கில் பார்வை மகஜர் தயார் செய்திருப்பதற்காக தங்களிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றும், மேற்படி வழக்கு குறித்த சங்கதிகள் தனக்கு நினைவில் இல்லை என்றும், இது சம்பந்தமாக போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

8.6) அ.சா.6 ஜானகிராம் தனது சாட்சியத்தில், தான் இறுதியாக சென்னை ஆவடி ஆர்.சி. பெட்டாலியனில் தளவாய் ஆக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்று தற்போது செங்கோட்டையில் குடியிருந்து வருகிறதாகவும், கடந்த 04.05.1999 ம் தேதி தான் திருப்புவனம் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது திருப்புவனம் காவல் நிலைய குற்ற எண். 160/1999 இதச பிரிவுகள் 147, 323, 336, 353 இதச வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமைக் காவலர் 1188 திரு.பிச்சாண்டி என்பவரிடமிருந்து வழக்கு விசாரணைக்காக வழக்கு கோப்பினை தான் பெற்று கடந்த 07.05.1999 ம் தேதியன்று மேற்படி வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு மதியம் 13.00 மணிக்கு சம்பவ இடத்தை சாட்சிகள் முருகேசன், துரைசிங்கம் ஆகியோர்கள் முன்பு பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.4 என்றும், அன்றைய தினம் சாட்சிகள் தலைமைக்காவலர் 122 திரு.நரசிங்கம், ARPC 1508 திரு.ராஜன், முதல் நிலைக்காவலர் 1302 திரு.வெள்ளைத்துரை, முதல் நிலைக்காவலர் 1267 திரு. மதியழகன், சாட்சி VAO திருப்புவனம் புதுார் முருகேசன், சாட்சி கிராம உதவியாளர் துரைசிங்கம் ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன் என்றும், பின்பு 18.05.1999 ம் தேதி சாட்சி தலைமைக்காவலர் 1188 பிச்சாண்டி என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், கடந்த 01.06.1999 ம் தேதியன்று இந்த வழக்கில் காயம்பட்ட வாதி நரசிங்கம் என்பவருக்கு காயச்சான்று பெற்றேன் என்றும், நரசிங்கம் என்பவரது காயச்சான்று அ.த.சா.ஆ. 5 என்றும், இந்நிலையில் தான் பணிமாறுதல் பெற்று மதுரை மாநகருக்கு சென்றதால் வழக்கு கோப்பினை ஆய்வாளர் திரு.முருகேசன் வசம் ஒப்படைத்ததாகவும், ஆய்வாளர் திரு.முருகேசன் இறந்துவிட்டதால் துரித விசாரணை மற்றும் நீதியின் நலன் கருதி அவரது பகுதியையும் சேர்த்து நான் சாட்சியம் அளிக்கிறேன்

VENKADESHPRASANTH
Digitally signed by VENKADESHPRASANTH
Date: 2026.03.10 17:33:46 +0530

என்றும், காவல் ஆய்வாளர் திரு.முருகேசன் இவ்வழக்கினை மேல் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு கடந்த 01.02.2000 ம் தேதியன்று AR போலீஸ் திரு.ராஜன் என்பவரது காயச்சான்று பெற்றுள்ளார் என்றும், ராஜன் என்பவரது காயச்சான்று அ.த.சா.ஆ.6 என்றும், பின்பு நரசிங்கம், ராஜன் ஆகியோர்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் விஜயக்குமார் என்பவரை விசாரணை செய்து அன்றைய தினமே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், எதிரிகள் அனைவரும் தலைமறைவாக இருந்த காரணத்தினால் அவர்களை தானோ ஆய்வாளர் திரு.முருகேசன் என்பவரோ கைது செய்ய இயலவில்லை என்றும், அதன் பின்பு காவல் ஆய்வாளர் திரு.முருகேசன் தனது விசாரணை முடித்துக்கொண்டு எதிரிகள் மீது இதச பிரிவிகள் 147, 332, 353 ன் கீழ் 01.02.2000 ம் தேதியன்று சிவகங்கை நீதித்துறை நடுவர் எண்.2, சிவகங்கையில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளது பற்றி சாட்சியம் அளித்துள்ளார்.

9)அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட அரசுதரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து இவ்வழக்கு எதிரிகளுக்கு பாதகமாக அமைந்த அம்சங்களை குறித்து கு.வி.மு.ச.313 (1) (ஆ) பிரிவின் கீழ் வினவியபோது, எதிரிகள் அவற்றினை பொய் சாட்சி என்று மறுத்துக் கூறினார்கள். எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டா, என்று வினவிய போது எதிரிகள் தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறினார்கள்.

10) இவ்வழக்கு எதிரிகள் மீது அரசுதரப்பில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அனைத்தும் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே தீர்வுக்குரிய பிரச்னையாகும்.

11) **தீர்வு–**

அரசு தரப்பு வழக்கானது இவ்வழக்கில் கடந்த 03.05.1999ம் தேதி மதியம் திருப்புவனம் நகர் தேவர் பேரவையினர் செய்த கலவரத்தில் கைது செய்து கொண்டு வரலான எதிரி ஜெகதீசன் என்பவர் உடல் நலக்குறைவு காரணமாக திருப்புவனம் ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்கு கொண்டு போகும் போது இறந்துவிட்டார். அதனால் எதிரிகள் 03.05.1999ம் தேதி 21.30 மணிக்கு திருப்புவனம் காவல்நிலையம் முன்பு சட்டவிரோதமாக ஒன்றுகூடி கலகம் செய்து தனிப்பிரிவு அலுவல் மற்றும் பாதுகாப்பு அலுவலில் இருந்த சாட்சி1, சாட்சி2 ஆகியோரை கற்களால் எரிந்து சாட்சி1க்கு இடது கண்ணுக்கு கீழ் முகத்தில் சிறிய காயங்களையும், சாட்சி2க்கு தலையின் வலது பக்கம், இடது மார்பு ஆகிய இடங்களில் சிறிய ரத்தக்காயத்தையும் உண்டு பண்ணி அரசு அலுவல் செய்யவிடாமல் தடுத்த குற்றம் புரிந்ததற்காக எதிரிகள் மீது இதச பிரிவுகள் 147, 336, 353–ன் கீழ் குற்ற

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.10 17:33:52 +0530

இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, அதனை நிரூபிக்கும் பொருட்டு அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் முன்னிலைப்படுத்துள்ளனர்.

12) அரசு தரப்பில் ஆஜரான கற்றறிந்த அரசு வழக்கறிஞர் தனது வாதுரையில், அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் அனைவரும் தங்களது சாட்சியத்தில், சம்பவம் பற்றி சாட்சியம் அளித்துள்ளதாகவும், எதிரிகள் கலகம் செய்யும் நோக்கத்தோடு, அரசு பணியை செய்யவிடாமல் தடுத்து பட்டியல் சாட்சி 1, 2க்கு கற்களை எரிந்து காயத்தை ஏற்படுத்தி உள்ளார்கள் என்பதை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்துள்ளார்கள் என்றும், எனவே எதிரிகள் மீதான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்று முடிவு செய்து எதிரிகளுக்கு தக்க தண்டனை வழங்க வேண்டி வாதுரை எடுத்துரைக்கப்பட்டது.

13) 2, 5 முதல் 9, 11, 12, 15 எதிரிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில், எந்த எதிரி யாரை என்ன ஆயுதங்கள் கொண்டு தாக்கினார் என்பது குறித்து குறிப்பிட்டு எந்தவொரு சாட்சியும் சாட்சியம் அளிக்கவில்லை என்றும் சம்பவ தினத்தன்று திருப்புவனம் நகரில் நடந்த தேவர் பேரவை சம்பந்தமான கலவரத்தில் ஜெகதீசன் என்பவர் காவல் விசாரணைக்கு அழைத்து செல்லப்பட்டு காவல் விசாரணையின் போது இறந்துவிட்டதாகவும், அதனால் அந்த பிரச்சனையிலிருந்து காவல்துறையினரை காப்பாற்றுவதற்காக திருப்புவனம் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதியை சார்ந்த பல்வேறு நபர்கள் மீது பல்வேறு வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது எனவும் அதில் இந்த வழக்கும் ஒன்றாகும் என்றும் முதல் தகவல் அறிக்கையில் காவல் நிலையம் முன்பு 150 நபர்கள் கூடி கலவரத்தில் ஈடுபட்டதாக சொல்லியுள்ள நிலையில், 15 நபர்கள் மட்டுமே எதிரிகளாக சேர்க்கப்பட்டு குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், வழக்கில் கண்ட 15 நபர்கள் தான் சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என்பது எவ்வாறு தெரிய வந்தது என்பதை புலன் விசாரணை அதிகாரி தனது சாட்சியத்தின் மூலம் நிரூபணம் செய்யவில்லை என்றும், முதல் தகவல் அறிக்கை முதல் குற்ற இறுதியறிக்கை வரையிலும் சந்தேகம் நிறைந்ததாக உள்ளது என்றும், இவ்வழக்கில் காயம்பட்ட சாட்சிகளாக காட்டப்பட்டுள்ள பட்டியல் சாட்சி 1, 2 விசாரிக்கப்படவில்லை என்றும், எனவே கலவரத்தில் ஈடுபட்டவர்கள் இந்த எதிரிகள் தான் என்பதையும், காயம்பட்ட சாட்சிகளுக்கு காயத்தை விளைவித்தவர் எந்த எதிரி என்பது குறித்தும் அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள சாட்சிகள் தங்களது சாட்சியத்தில் தெரிவிக்கவில்லை என்றும், வழக்கானது சந்தேகம் மிகுந்ததாக உள்ளதால் சந்தேகத்தின்

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.10 17:33:59 +0530

பலனை எதிரிகளுக்கு அளித்து, எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பளிக்க வேண்டுமாய் வாதிடப்பட்டது.

14) இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சியாக முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள அ.சா.1 தனது சாட்சியத்தில், கடந்த 03.05.1999ம் வருடத்தில் தான் திருப்புவனம் காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்து வந்ததாகவும், கடந்த 03.05.1999ம் தேதி திருப்புவனம் நகரில் நடந்த தேவர் பேரவையினர் சம்பந்தமான கலவரத்தில் கைது செய்யப்பட்ட ஜெகதீசன் என்பவருக்கு ஏற்பட்ட உடல்நிலை குறைவு காரணமாக இறந்துவிட்டதால் பிரச்சனை ஏற்பட்டதாகவும், எனவே திருப்புவனம் காவல்நிலையத்தின் முன்பு பாதுகாப்பு அலுவலலில் இருந்த போது இரவு சுமார் 9.30 மணியளவில் எதிரிகள் அனைவரும் காவல்நிலையம் முன்பு வந்து காவல்நிலையத்தை நோக்கி கற்களை வீசியதாகவும், ஆட்கள் மீதும் காவல்நிலையத்தின் மீதும் கற்கள் விழுந்ததாகவும், எதிரிகள் கற்களை எரிந்ததில் தலைமை காவலர் நரசிங்கம் என்பவருக்கு இடது கண்ணுக்கு கீழ் வீக்கக்காயமும், இரத்தக்காயமும் ஏற்பட்டதாகவும், மற்றொரு ஆயுதப்படை காவலர் ராஜன் என்பவருக்கு இடது மார்பில் கற்கள் விழுந்ததில், இடது மார்பில் காயம் ஏற்பட்டதாகவும் இதுதொடர்பாக சட்ட ஒழுங்கு பிரச்சனை இருந்ததால் மறுநாள் 04.05.1999 அன்று இரவு 7.15 மணியளவில் இச்சம்பவம் தொடர்பாக தலைமை காவலர் நரசிங்கம் என்பவர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும் சாட்சியம் அளித்துள்ள நிலையில் அ.சா.1ன் சாட்சியத்தை பரிசீலனை செய்கையில், எந்த எதிரி கற்களால் பட்டியல் சாட்சி 1, 2க்கு காயத்தை விளைவித்தார் என குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. அதேபோல் சம்பவத்தில் இந்த 15 நபர்கள் தான் ஈடுபட்டார்கள் என்பது குறித்த எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை.

15)இவ்வழக்கில் பார்வை மகஜர் சாட்சியாக, அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள அ.சா.2 முருகேசன் தனது சாட்சியத்தில், சம்பவ சமயத்தில் திருப்புவனம் புதூர் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வந்ததாகவும், கடந்த 07.05.1999ம் தேதியில் தானும், தலையாரி துரைசிங்கம் என்பவரும் திருப்புவனம் காவல்நிலையம் அருகில் மதியம் சுமார் 1.00 மணியளவில் இருந்த போது இந்த வழக்கு சம்பந்தமாக சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், அதில் தானும், தலையாரியும் சாட்சி கையொப்பம் செய்ததாகவும், மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ.1 என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.10 17:34:05 +0530

16) இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சாட்சியாக, அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள அ.சா.3 பிச்சாண்டி தனது சாட்சியத்தில், திருப்புவனம் தனிப்பிரிவில் இருந்த தலைமை காவலர் நரசிங்கம் என்பவர் கடந்த 04.05.1999ம் தேதி இரவு சுமார் 7.45 மணியளவில் தான் திருப்புவனம் காவல்நிலையத்தில் பணியில் இருந்த போது எழுத்துமூலமான புகார் கொடுத்தாகவும் அந்த புகாரினை பெற்று காவல் ஆய்வாளரின் உத்தரவின் பேரில் புகாரின் தன்மைக்கேற்ப திருப்புவனம் காவல்நிலைய குற்ற எண்.160/1999 பிரிவுகள் 147, 323, 332, 353 இதச வின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும், மேற்படி முதல் தகவல் அறிக்கையையும், அசல் புகாரையும் இணைத்து சிவகங்கை நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்–2 நீதிமன்றத்திற்கும், பிற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்ததாகவும், இவ்வழக்கில் கலவரத்தில் ஈடுபட்டவர்கள் கற்கள் வீசியதில் புகார்தாரருக்கு, இடது கண்ணிற்கு கீழ் ஊமைக்காயங்கள் மற்றும் ரத்தக்காயங்கள் ஏற்பட்டதாகவும், தன்னுடன் இருந்த ராஜன் ஆயுதப்படை காவலருக்கு உடம்பு, நெஞ்சு ஆகிய பகுதிகளில் ஊமைக்காயம் ஏற்பட்டதாகவும் புகாரில் குறிப்பிட்டுள்ளதாகவும், மேற்படி காயம்பட்டவர்களை திருப்புவனம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும், இவ்வழக்கு சம்பந்தமாக காவல் ஆய்வாளர் தன்னை விசாரித்தாகவும் சாட்சியம் அளித்துள்ளார். எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்த போது அ.சா.3 தனது குறுக்கு விசாரணையில், சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் காவல்நிலையத்திற்கு முன்பு எவ்வளவு தூரம் என்று புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றும், சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரம் இரவு 9.30 மணி என்பதால் இருட்டான நேரம் என்றால் சரிதான் என்றும், சம்பவம் நடந்த மறுநாள் இரவு 7.45 மணியளவில் புகார் கொடுக்கப்பட்டுள்ளதாகவும், ஒரு நாள் காலதாமதமாக கொடுக்கப்பட்ட புகார் என்றால் சரிதான் என்றும், காவல்நிலையத்திற்கு முன்பு சம்பவம் நடந்திருந்தால் அடுத்த ஒரு நிமிடமே புகார் கொடுக்க வாய்ப்புள்ளது என்றால் சரியல்ல என்றும், அன்றைய தினம் பெரிய கலவரம் நடந்துள்ளது என்பதால் புகார் கொடுக்க வாய்ப்பில்லை என்றும், புகாரில் 15 நபர்கள் கலவரத்தில் ஈடுபட்டதாக தான் சொல்லப்பட்டுள்ளது மேற்படி நபர்கள் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

17)இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சியாக, அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள அ.சா.4 வெள்ளத்துரை தனது சாட்சியத்தில், கடந்த 03.05.1999ம் தேதி இரவு 21.30 மணிக்கு தான் திருப்புவனம் காவல்நிலையத்தில்

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.10 17:34:11 +0530

முதல்நிலை காவலராக பணிபுரிந்து வந்த போது தன்னுடன் பணியில் இருந்த போது தனிப்படை காவலர் நரசிங்கம், ஆயுதப்படை காவலர் ராஜன் மற்றும் முதல்நிலை காவலர் மதியழகன், தன்னுடன் திருப்புவனம் காவல்நிலையம் முன்புறம் பணியிலிருந்த போது வழக்கின் எதிரிகள் மாரி, நெடுமாறன், ரவி, அயோத்தி, கருப்பசாமி, மகேந்திரன், லோகநாதன், வேலுப்பாண்டி, குமார், போத்திராஜா, சுரேஷ், இளமாறன், உச்சிமாகாளி அம்மன் கோவில் தெருவை சேர்ந்த சுரேஷ் கண்ணன் மற்றும் சிலர் ஆகியோர்கள் கலவரம் செய்யும் நோக்கத்தோடு கையில் கற்களோடு தங்கள் பணி செய்யும் இடத்திற்கு வந்து கல்லால் எறிந்து பணி செய்ய விடாமல் தடுத்ததாகவும், கல்லால் எதிரிகள் எறிந்ததில் பணியில் இருந்த தலைமை காவலர் நரசிங்கம் என்பவருக்கு இடதுபக்க கண்ணுக்கு கீழ் கன்னத்தில் காயம் ஏற்பட்டதாகவும், ஆயுதப்படை ராஜன் என்பவருக்கு இடது பக்க நெஞ்சில் காயம் ஏற்பட்டதாகவும், இது சம்பந்தமாக தலைமை காவலர் நரசிங்கம் திருப்புவனம் காவல்நிலையத்தில் மறுநாள் 04.05.1999ம் தேதி இரவு 7.45 மணிக்கு புகார் கொடுத்தாகவும், கலவரமாக இருந்ததால் மறுநாள் புகார் கொடுத்ததாகவும், மேற்படி புகாரை பெற்று தலைமை காவலர் பிச்சாண்டி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி அ.சா.4ம் தனது சாட்சியத்தில் எந்த எதிரி யாரின் மீது கல்லை எறிந்தார் என்றோ, எந்த எதிரியால் பட்டியல் சாட்சி1, 2க்கு காயம் விளைவிக்கப்பட்டது என்பது குறித்தோ குறிப்பிட்டு எதுவும் சாட்சியம் அளிக்கவில்லை என்பதை அறிய முடிகிறது.

18) இவ்வழக்கில் மற்றொரு பார்வை மகஜர் சாட்சியாக, அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள அ.சா.5 துரைசிங்கம் தனது சாட்சியத்தில், சாட்சி முருகேசனைத் தெரியும் என்றும், அவர் சம்பவ சமயம் திருப்புவனம் புதூர் கிராம நிர்வாக அலுவலராக வேலைப் பார்த்தார் என்றும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது கையொப்பம் தன்னுடையது தான் என்றும், அதில் முதலாவதாக கிராம நிர்வாக அலுவலர் முருகேசன் கையொப்பம் செய்துள்ளார் என்றும், கடந்த 1999 ம் வருடம் தேதி, மாதம் நினைவில் இல்லை ஒரு வழக்கு சம்பந்தமாக தானும், கிராம நிர்வாக அலுவலர் முருகேசனும் திருப்புவனம் காவல் நிலையத்திற்கு சென்றிருந்தோம் என்றும், அங்கு போலீசார் மேற்சொன்ன பார்வை மகஜரில் தன்னிடமும், கிராம நிர்வாக அலுவலகர்களிடமும் சாட்சியாக கையொப்பம் வாங்கினார்கள் என்றும், பார்வை மகஜரை கிராம நிர்வாக அலுவலர் முருகேசன் படித்துப் பார்த்தார் என்றும், போலீசார் ஒரு வழக்கில் பார்வை மகஜர் தயார் செய்திருப்பதற்காக தங்களிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றும்,

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.10 17:34:17 +0530

மேற்படி வழக்கு குறித்த சங்கதிகள் தனக்கு நினைவில் இல்லை என்றும், இது சம்பந்தமாக போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.5 பிறழ் சாட்சியம் அளித்துள்ளதால் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டும், அரசு தரப்பிற்கு யாதொரு சாதகமான பதில்களும் பெறப்பட்டவில்லை என்பதால் அ.சா.5ன் சாட்சியம் நம்பும்படியாகவும், அரசு தரப்பு வழக்கிற்கு சாதகமாகவும் அமையவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

19) இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.6 ஜானகிராம் தனது சாட்சியத்தில், கடந்த 04.05.1999 ம் தேதி தான் திருப்புவனம் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது திருப்புவனம் காவல் நிலைய குற்ற எண். 160/1999 இதச பிரிவுகள் 147, 323, 332, 353 இதச வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமைக் காவலர் 1188 திரு.பிச்சாண்டி என்பவரிடமிருந்து வழக்கு விசாரணைக்காக வழக்கு கோப்பினை தான் பெற்று கடந்த 07.05.1999 ம் தேதியன்று மேற்படி வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு மதியம் 13.00 மணிக்கு சம்பவ இடத்தை சாட்சிகள் முருகேசன், துரைசிங்கம் ஆகியோர்கள் முன்பு பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், அன்றைய தினம் சாட்சிகள் தலைமைக்காவலர் 122 திரு.நரசிங்கம், ARPC 1508 திரு.ராஜன், முதல் நிலைக்காவலர் 1302 திரு.வெள்ளைத்துரை, முதல் நிலைக்காவலர் 1267 திரு. மதியழகன், சாட்சி VAO திருப்புவனம் புதுார் முருகேசன், சாட்சி கிராம உதவியாளர் துரைசிங்கம் ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன் என்றும், பின்பு 18.05.1999 ம் தேதி சாட்சி தலைமைக்காவலர் 1188 பிச்சாண்டி என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், கடந்த 01.06.1999 ம் தேதியன்று இந்த வழக்கில் காயம்பட்ட வாதி நரசிங்கம் என்பவருக்கு காயச்சான்று பெற்றேன் என்றும், இந்நிலையில் தான் பணிமாறுதல் பெற்று மதுரை மாநகருக்கு சென்றதால் வழக்கு கோப்பினை ஆய்வாளர் திரு.முருகேசன் வசம் ஒப்படைத்ததாகவும், ஆய்வாளர் திரு.முருகேசன் இறந்துவிட்டதால் துரித விசாரணை மற்றும் நீதியின் நலன் கருதி அவரது பகுதியையும் சேர்த்து நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், காவல் ஆய்வாளர் திரு.முருகேசன் இவ்வழக்கினை மேல் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு கடந்த 01.02.2000 ம் தேதியன்று AR போலீஸ் திரு.ராஜன் என்பவரது காயச்சான்று பெற்றுள்ளார் என்றும், பின்பு நரசிங்கம், ராஜன் ஆகியோர்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் விஜயக்குமார் என்பவரை விசாரணை செய்து அன்றைய தினமே வாக்குமூலம் பதிவு

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.10 17:34:23 +0530

செய்துள்ளார் என்றும், எதிரிகள் அனைவரும் தலைமறைவாக இருந்த காரணத்தினால் அவர்களை தானோ ஆய்வாளர் திரு.முருகேசன் என்பவரோ கைது செய்ய இயலவில்லை என்றும், அதன் பின்பு காவல் ஆய்வாளர் திரு.முருகேசன் தனது விசாரணை முடித்துக்கொண்டு எதிரிகள் மீது இதச பிரிவிகள் 147, 332, 353 ன் கீழ் 01.02.2000 ம் தேதியன்று சிவகங்கை நீதித்துறை நடுவர் எண்.2, சிவகங்கையில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளது பற்றி சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.6 தனது குறுக்கு விசாரணையில், சம்பவத்தில் ஈடுபட்டதாக சொல்லப்படும் நபர்கள் இனம் தெரிந்த பெயர் தெரியாத 150 நபர்கள் என முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள என்றால் சரிதான் என்றும், இவ்வழக்கின் எதிரிகள் பெயர் எதுவும் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்றும், இந்த வழக்கில் எதிரிகளாக 15 நபர்களை சாட்சிகளின் வாக்குமூலங்களின் அடிப்படையில் சேர்த்துள்ளதாகவும், ஆனால் இறுதியறிக்கையில் குறிப்பிடவில்லை என்றும் சம்பவ தினத்திற்கு மறுநாள் 04.05.1999ம் தேதி இரவு 9.15 மணிக்கு தான் மருத்துவமனை சென்றதாக விபத்து பதிவேட்டில் குறிப்பிடப்பட்டது என்றால் சரிதான் என்றும், காயம்பட்ட நபர்களுக்கு ஏற்பட்ட காயமானது எந்த எதிரியால் ஏற்பட்டது என்பது குறித்து தனது விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் குறிப்பிட்டு எந்த எதிரிகள் என சாட்சிகள் தங்களது வாக்குமூலத்தில் கூறவில்லை என்றும், நீதிமன்றத்திற்கு முதல் தகவல் அறிக்கை 04.05.1999ம் தேதி அனுப்பப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது நேரம் குறிப்பிடவில்லை என்றும் ஆனால் நீதிமன்றத்திற்கு அனுப்பட்டுள்ள முதல் தகவல் அறிக்கையில் 05.05.1999ம் தேதி காலை 10.00 மணிக்கு பெறப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ள என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

20) மேற்படி சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து சம்பவத்தில் 150 நபர்கள் ஈடுபட்டதாக பெயர் எதுவும் குறிப்பிடப்படாமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நிலையில், இவ்வழக்கில் எதிரிகளாக உள்ள 15 நபர்களை மட்டுமே இறுதியறிக்கையில் எதிரிகளாக கண்டு இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டதற்கு உரிய விளக்கம் அரசு தரப்பில் சாட்சிகளின் வாயிலாக நிரூபணம் செய்யவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட எந்தவொரு சாட்சியும் தங்களது சாட்சியத்தில், இவ்வழக்கில் சேர்க்கப்பட்ட 15 எதிரிகளில் எந்த எதிரி தாக்கியதன் விளைவாக பட்டியல் சாட்சி 1, 2 க்கு காயம் ஏற்பட்டது என்பது குறித்து குறிப்பிட்டு சாட்சியம் அளிக்காத நிலையில், பிரிவு 332ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. புகாரானது ஒருநாள்

VENKADESHPRASANTH
Digitally signed by VENKADESHPRASANTH
Date: 2026.03.10 17:34:28 +0530

காலதாமதமாக கொடுக்கப்பட்டதற்கு சாட்சிகள் விளக்கம் அளித்துள்ள போதிலும், காயம்பட்ட நபர்கள் 04.05.1999ம் தேதி புகார் கொடுத்த பின்னர் சிகிச்சைக்கு சேர்த்ததாக சொல்லி உள்ள நிலையில், காயம்பட்ட நபர்களுக்கு உண்மையிலேயே காயம் ஏற்பட்டிருந்தால் சம்பவம் நடைபெற்ற அன்றே சிகிச்சைக்கு சேர்ந்திருக்க வேண்டும் என்றும் புகார் கொடுத்த பின் சம்பவ நடந்த தேதியிலிருந்து ஒருநாள் காலதாமதமாக சிகிச்சைக்கு சேர்ந்ததாக சொல்லி இருப்பது அரசு தரப்பு வழக்கின் மீது மிகப்பெரிய ஐயப்பாட்டை ஏற்படுத்துவது மட்டுமல்லாமல், சந்தேகம் நிறைந்ததாகவும் உள்ளது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

21) சம்பவ சமயத்தில் நடைபெற்ற கலவரத்தில் 150 நபர்கள் ஈடுபட்டதாக புகாரில் தெரிவித்துள்ள நிலையில், இவ்வழக்கில் கண்ட எதிரிகள் மட்டும் சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என்பது குறித்தும் சாட்சிகளின் அரசு பணியை செய்யவிடாமல் இந்த எதிரிகள் தான் தடுத்தார்கள் என்பது குறித்தும் குறிப்பிட்டு யாரும் சாட்சியம் அளிக்காததால் இதச பிரிவுகள் 353 மற்றும் 147ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரிகளை விடுதலை செய்ய வேண்டியது அவசியம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

22) **முடிவாக**, 2, 5 முதல் 9, 11, 12, 15ம் எதிரிகள் இதச பிரிவுகள் 147, 332, 353ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து, கு.வி.மு.ச. பிரிவு 248(1)–ன் கீழ் எதிரிகளை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை. அதுகுறித்த உத்தரவு ஏதும் பிறப்பிக்கப்படவில்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026–ம் ஆண்டு மார்ச் திங்கள்–10ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.10 17:34:36 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்

அரசு தரப்பு சாட்சிகள்:–

| | |
|---|---|
| அ.சா.1 | மதியழகன், கண்ணுற்ற புகார்தாரர் |
| அ.சா.2 | முருகேசன், பார்வை மகஜர் சாட்சி |

| | |
|---|---|
| அ.சா.3 | பிச்சாண்டி, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சாட்சி |
| அ.சா.4 | வெள்ளத்துரை, கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.5 | துரைசிங்கம், பார்வை மகஜர் சாட்சி |
| அ.சா.6 | ஜானகிராம், காவல் ஆய்வாளர், புலன் விசாரணை அதிகாரி |

அரசுதரப்பு சான்றாவணங்கள்:–

| | |
|---|---|
| அ.த.சா.ஆ.1/அ.சா.2 | பார்வை மகஜர் |
| அ.த.சா.ஆ.2/அ.சா.3 | புகார் மனு |
| அ.த.சா.ஆ.3/அ.சா.3 | முதல் தகவல் அறிக்கை |
| அ.த.சா.ஆ.4/அ.சா.6 | மாதிரி வரைபடம் |
| அ.த.சா.ஆ.5/அ.சா.6 | நரசிங்கம் என்பவரது காயச்சான்று |
| அ.த.சா.ஆ.6/அ.சா.6 | ராஜன் என்பவரது காயச்சான்று |

**அரசு தரப்பு சான்றுபொருட்கள் இல்லை**

எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருட்கள்– இல்லை

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.10 17:34:44 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்.

குறிப்பு–
1. விசாரணை காலத்தில் எதிரிகள் பிணையில் இருந்தார்.
2. வழக்கின் முடிவு காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
3.வழக்கின் சாட்சிகள் 3 வாய்தாவிற்கு மேல் விசாரணையின்றி நிறுத்திவைக்கப்படவில்லை.

**ஆண்டு பட்டிகை வழக்கு எண்.16/2019**
**நாள்: 10.03.2026**
**தீர்ப்புரை அவையறிய பகரப்பட்டது.**

**முடிவாக,** 2, 5 முதல் 9, 11, 12, 15ம் எதிரிகள் இதச பிரிவுகள் 147, 332, 353ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து, கு.வி.மு.ச. பிரிவு 248(1)–ன் கீழ் எதிரிகளை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை. அதுகுறித்த உத்தரவு எகும் பிறப்பிக்கப்படவில்லை.

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.10 17:34:52 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்